தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 29, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2033
2002 ஏப்ரல் 12, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்."

தாமே தொழில் செய்து ஊதியம் பெற்று உண்ணும் இயல்புடையவர், பிறரிடம் சென்று கையேந்தமாட்டார். தம்மிடம் வேண்டி நின்றவர்க்கும் ஒளிக்காமல் வழங்குவார்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 125, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

125—

செண்பகவல்லி அணை

***5143—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செண்பகவல்லி அணை உடைப்பை அடைக்கும் பணி நடைபெறவில்லை என்பதை அரசு அறியுமா?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) செண்பகவல்லி அணை கேரள மாநில எல்லைக்குள் அமைந்திருப்பதால் அவ்வணையைப் பழுதுபார்க்கும்படி கேரள அரசை இவ்வரசு தொடர்ந்து கேட்டுக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரன் (குறுக்கீடு) திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த செண்பகவல்லி அணை உடைப்பு அடிக்கடி ஏற்பட்டு விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் கேரள அரசோடு தொடர்பு கொண்டு இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் உள்ள சொக்கம்பட்டி மலையின் பள்ளத்தாக்கிற்குச் செல்லும் சொக்கப்பட்டித்தோடு மற்றும் புளியம்பட்டித்தோடு ஆகிய இரண்டு ஓடைகளில், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இவ்வணையைப் பொறுத்தவரை, 1964 ஆம் ஆண்டு பெய்த கூடுதல் மழையினால் அணையும், கால்வாயும் பழுதடைந்து உடைப்பு ஏற்பட்டது. செண்பகவல்லி பிரிப்பு அணை மற்றும் கால்வாய் கேரள மாநில எல்லையில், அடர்ந்த வனப் பகுதியில், மிகவும் உட்பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி செண்பகவல்லி பிரிப்பு அணை மற்றும் கால்வாயில் ஏற்பட்ட உடைப்பைச் சரிசெய்வதற்கு 1978 ஆம் ஆண்டு கேரள அரசு ரூ.5,80,000-க்கு அனுப்பிய மதிப்பீட்டிற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்தது. மீண்டும் 1-7-1982-ல் உள்ள விலைப்புள்ளியின் அடிப்படையில் கேரள மாநில அரசால் ரூ.10,29,732-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதில் 50 சதவிகிதத் தொகையான ரூ.5.15 இலட்சம் முன்பணமாக மார்ச் 1986-ல் கேரள அரசுக்குச் செலுத்தப்பட்டது. மேற்கண்ட பணியிடமானது கேரள-பெரியாறு வனப் புலிகள் சரணாலயமாக கேரள வனத் துறையால் அறிவிக்கப்பட்டுள்ளதால், கேரள வனத் துறையின் அனுமதி தேவைப்படுகிறது. ஆகவே, தற்போது

2002 ஏப்ரல் 12]

மேற்படி உடைப்பைச் சரிசெய்வதற்கு ஆகும் செலவுக்குண்டான மதிப்பீட்டை கேரள மாநில அரசே தயாரிக்கலாம் அல்லது கேரள மாநில வனப் பகுதியில் நுழைந்து மதிப்பீடு தயாரிப்பதற்கான நில அளவை செய்வதற்கும் மற்றும் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்கும் கேரள மாநில அரசிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றால்தான் தமிழக அரசால் மதிப்பீடு தயாரிக்க முடியும். 28-11-1996 அன்று சென்னையில் அமைச்சர்கள் நிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, இந்த இடம் வனப் பகுதியில் உள்ளதால் கேரள வனத் துறையுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக கேரளத் தரப்பில் கூறப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, கேரள அரசுடன் கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டது. 8-7-1999 அன்று அமைச்சர், பொதுப் பணி மற்றும் வனம், அவர்களிடமிருந்து கேரள பாசனத் துறை அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்திற்கு, கேரள பாசனத் துறை அமைச்சர், அவரது 1-9-1999 ஆம் நாளிட்ட கடிதத்தில் இந்தச் சீரமைக்கும் பணிகளைக் கீழ்க்கண்ட காரணங்களினால் தற்போது மேற்கொள்ள இயலாது என்று தெரிவித்துள்ளார்:

"செண்பகவல்லி அணை கட்டுவதற்கு எவ்வித ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே, அனுமதி பெறாமல் இவ்வணை கட்டப்பட்டுள்ளது என்று யூகிக்கப்படுகிறது. பெரியாறு புலிகள் சரணாலயத்திற்குள் இவ்வணை உள்ளதால், இவ்வணையில் எந்தவொரு பணியையும் மேற்கொள்வதற்கு முன்னர், வனத் துறையின் அனுமதியைப் பெறவேண்டும். உச்ச நீதிமன்றம் அண்மையில் பிறப்பித்துள்ள ஆணையின்படி, வனமல்லாத பணிகளை வனத்திற்குள் மேற்கொள்ளக்கூடாது."

மீண்டும் 22-2-2000 அன்று அமைச்சர், பொதுப் பணி, அவர்களிடமிருந்து கேரள பாசனத் துறை அமைச்சருக்கு, செண்பகவல்லி அணையைச் சீரமைக்கும் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கு, 30-9-2000 அன்று கேரள பாசனத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து, அமைச்சர், பொதுப் பணி மற்றும் வனம் அவர்களுக்கு, அனுப்பப்பட்ட பதிலில், ஏற்கெனவே சொல்லப்பட்ட காரணங்களையே வலியுறுத்தி, இவ்வரசின் செயற்குறிப்பை ஏற்க இயலாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் தமிழ்நாடு, கேரளா அமைச்சர்களுக்கிடையில் நிலுவையில் இருந்து வரும் நதி

நீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்பொருட்டு, புதிதாகப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளலாம் என்றும், இதற்கான கேரள அரசின் வசதியைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மாண்புமிகு கேரள முதலமைச்சருக்கு செப்டம்பர் 2001-ல் கடிதம் அனுப்பப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, அமைச்சர்கள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர், அதிகாரிகள் நிலையில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளலாம் என்று கருதப்பட்டு, கேரள அரசின் வசதியைத் தெரிவிக்குமாறும் கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிகாரிகள் நிலையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில், "செண்பகவல்லி அணைக்கட்டினைப் பழுதுபார்க்கும் பணி" என்ற பொருளும் பேசப்பட உள்ளது. மேலும், செண்பகவல்லி அணைக்கட்டினைப் பழுதுபார்க்கும் பணியை விரைவில் முடித்திட கேரள அரசுக்குத் தகுந்த அறிவுரை வழங்குமாறு மார்ச் 2000-ல் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், அமைச்சர் விளக்கமாகச் சொல்லிவிட்டார்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செண்பகவல்லி அணை உடைப்பை உடனடியாக அடைக்கும் பணியை மேற்கொள்வதற்காக, பேச்சுவார்த்தை என்று தொடங்கினால்தான் எதையாவது சாதிக்க முடியும். நேற்றுக்கூட அரசு உறுதிமொழிக் குழுவிலே வந்திருந்த செயலாளர், மற்றவர்கள் எல்லாம் கூறுகின்றபோது, எந்தக் கடிதம் எழுதினாலும், கேரள அரசிடமிருந்து பதிலே வருவதில்லை என்கிற ஒரு நிலையினைக் கூட்டத்திலே அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே, அதிகாரிகளை விட்டு, கடிதப் போக்குவரத்து என்று வைத்துக் கொள்வதைவிட, இனி அமைச்சர்கள், நீங்களே கடிதப் போக்குவரத்து மூலமாக அல்லது—இப்போதுதான் S.T.D. facilities எல்லாம் இருக்கிறது, நீங்களே—தொலைபேசி மூலமாகப் பேசியாவது, ஒரு நாளைக் குறித்து, ஒரு பேச்சுவார்த்தை தொடங்கி, இந்தப் பணியை முடிப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2002 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனை; தொடர்ந்து இவ்வரசு அந்த அமைச்சர்களிடத்தில் நேரிடையாகத் தொடர்பு கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 126, திரு. ப. அண்ணாவி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

126—

தடுப்பணை

***15894—திரு. ப. அண்ணாவி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், ஸ்ரீராமசமுத்திரம், காவிரியில் தடுப்பணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காவிரி டெல்டாவிற்காக மேட்டூர் அணை மூடப்பட்ட பிறகு காவிரியில் வரும் குறைந்த அளவு நீர் ஸ்ரீராமசமுத்திரம் வாய்க்கால் (வடகரை வாய்க்கால்) தலைப்பிற்குச் செல்ல ஏதுவாக, வருடந்தோறும் காவிரியில் மண் கொரம்பு அமைத்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னைச் சட்டமன்ற உறுப்பினர் ஆக்கிய அம்மா அவர்களுக்கு கோடானு கோடி வணக்கங்கள். திருச்சி மாவட்டம், தொட்டியம்